சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:17.03.2025

PW2: முத்துப்பாண்டி த/பெ– பழனி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் டீக்கடை 20 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். நான் முதுகலை பட்டதாரி. வேலையாட்களை வைத்து நானே கடை நடத்தி வருகிறேன். வாதி எங்கள் ஊரைச்சேர்ந்தவர். வாதி எனக்கு 20 ஆண்டுகளாக பழக்கம். பிரதிவாதி எங்கள் ஊரைச்சேர்ந்தவர் இல்லை. அதனால் பிரதிவாதி எனக்கு முன்பின் பழக்கம் இல்லை என்றால் சரிதான். டீக்கடையை நான் காலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை நடத்தி வருகிறேன். வா.சா.ஆ.1 ல் உள்ள எனது சாட்சி கையொப்பமும், எழுதியதும், சாட்சியுமான இடத்தில் உள்ள எனது கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் வேகமாக எழுதியதால் வேறுபாடு உள்ளது. வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள சாந்தியின் மகன் என்பதில் சா என்ற எழுத்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதி சொல்ல சொல்ல வேகமாக எழுதியதால் வேறுபாடு உள்ளது. வா.சா.ஆ.1 ஐ வாதியின் வீட்டில் வைத்து எழுதினேன். வாதியின் வீடு, எனது வீட்டில் இருந்து ஒரு தெரு தள்ளி உள்ளது. 11.10.2021 அன்று காலை 11.00 மணிக்கு மேல் வா.சா.ஆ.1 ஐ எழுதினேன். பிரதிவாதி நீதிமன்ற ஊழியர் என்பது எனக்கு தெரியும். காலை 10 மணியில் இருந்து மாலை 6.00 மணி வரை பணியில் இருப்பார் என்றால் சரிதான். அவரது வருகை பதிவேடை பார்த்தால் அவர் நீதிமன்ற பணியில் இருந்தது தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஐ பிரதிவாதி சொல்லவில்லை என்றும், வாதி சொல்லி தான் வாதியின் வீட்டில் வைத்து நிரப்பினேன்

என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1ஐ கையெழுத்து நிபுணரிடம் அனுப்பினால் அது பிரதிவாதியின் கையெழுத்து தான் என்பது தெரியவரும் என்றால் சரிதான். நான் வாதிக்கு ஆதரவாகவும், பிரதிவாதிக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.